**வாக்குமூலம்**
**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 225/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 17.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சம்பத்குமார் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | சந்திரசேகர் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் விசலுர் என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். சுமார் 20 வருடங்களாக கோவில் கட்டும் வேலையை செய்து வருகிறேன். திருப்போரை சேர்ந்த முருகன் என்பவர் கோவில் கட்டுமான பணிக்காக என்னை வரச்சொன்னார். நான் என்னுடன் வேலை செய்யும் வீரய்யன் யை அழைத்து கொண்டு தியாகராஜன் மற்றம் கணேசன் இருவரையும் திருவள்ளூரை அடுத்த கீழச்சேரி கிராமத்திற்கு வரச்சொன்னேன். எங்களை கோவிந்தசாமி என்பவர் கோவில் கட்டும் இடத்தை காண்பித்தார். 2024ம் வருடம் மாதம் தேதி ஞாபகமில்லை அன்று காலை அந்த இடத்தில் பூஜை போட்டோம். அதன் பிறகு அந்த இடத்தை சுத்தம் செய்து விட்டு அன்று இரவு கோவிந்தசாமி என்பவர் எங்களை தங்கும் இடத்திற்கு அழைத்து சென்று டிபன ் வாங்கி கொடுத்துவிட்டு சென்றுவிட்டார் அன்று இரவு தியாகராஜனும் கணேசனும் வந்து சேர்ந்தார்கள் அடுத்தநாள் காலை கோவில் கட்டும் இடத்திற்கு வீரய்யனும் சென்றோம். அப்போது வீரய்யன் பாத்ரூம் செல்வதாக ஜல்லி குவியல் அருகே போன போது அங்கு ஒரு நபர் தலையில் அடிப்பட்டு குப்புற விழுந்து கிடப்பதாக வீரய்யன் என்னிடம் கூறினார் நான் இந்த தகவலை கோவிந்தசாமிடம் தெரிவித்தேன் போலிசார் எ்ங்களை அழைத்து விசாரணை செய்து எங்களை அனுப்பி வைத்துவிட்டார்கள்.

**குறுக்கு விசாரணை** இலலை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.17 10:13:32 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 225/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 4 |
| நாள் | : | 17.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வீரய்யன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | களியமுர்த்தி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் திப்புராஜபுரம் என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். சுமார் 3 வருடங்களாக கோவில் கட்டும் வேலையை செய்து வருகிறேன். ஆசா 3 சம்பத் என்பவர் என்னை கோவில் கட்டும் பணிக்கு கொத்தனாராக வேலை அழைத்தார். நானும் சம்பத்தும் முருகன் என்பவரிடம் புறப்பட்டு திருவள்ளுரை அடுத்த கீழச்சேரிக்கு வந்தோம். 2024ம் வருடம் மாதம் தேதி ஞாபகமில்லை அன்று காலை நானும் சம்பத்குமாரும் பிள்ளையாா் கோவில் கட்டும் இடத்தில் பூஜை போட்டோம்இருவர் கலவை போட்டு கொடுத்தார்கள் அன்று மாலை நாங்கள் தங்கும் இடத்திற்கு சென்றோம் அப்போது எங்களுடன் தியாகராஜனும் கணேசனும வந்து சேர்ந்தார்கள். எங்களுக்கு கோவிந்தசாமி என்பவர் அன்று இரவு டிபன் வாங்கி கொடுத்து விட்டு சென்றுவிட்டார். அடுத்தநாள் காலை நான் கோவில் கட்டும் இடத்தில் பாத்ரூம செல்வதற்காக ஜல்லிகுவியல் அருகே சென்றபோது ஒரு நபர் இரத்த காயத்துடன் குப்புர விழுந்து கிடந்ததை பார்த்து நான் சம்பத்குமாரிடம் தகவலை சொன்னேன். சம்பத்குமார் கோவிந்தசாமிக்கு போன் போட்டு தகவலை சொன்னார். இதுசம்பந்தாக போலிசார் என்னை விசாரணை செய்து அனுப்பி வைத்தார்கள்.

**குறுக்கு விசாரணை** இலலை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.17 10:13:38 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 225/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 5 |
| நாள் | : | 17.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தியாகராஜன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | சுப்பிரமணி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர**

**முதல் விசாரணை :**

நான் திருவாரூர் மாவட்டம் செரவலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். சுமார் 4 வருடங்களாக கோவில் கட்டும் வேலையை செய்து வருகிறேன். கோவில் கட்டும் பணி கான்டிராக்ட் எடுத்த சம்பத்குமார் என்பவருடன் வேலை செய்து வருகிறேன். அதே போல் கடந்த 2024ம் வருடம் சம்பத் என்பவர் போன் செய்து என்னையும் கணேசனையும், திருவள்ளூரை அடுத்த கீழச்சேரி கிராமத்தில் கொத்தனார் வேலை செய்வதற்காக அழைத்தார் அதன்படி நானும் கணேசனும் அன்றைய தேதி இரவு 08 மணிக்கு சம்பத்குமார் கூறிய இடத்திற்கு சென்றோம். நாங்கள் இருவரும் மப்பேடு கூட்ரோடுக்கு வந்து டிபன் வாங்கிகொண்டு தங்கும் இடத்திற்கு சென்றோம். அதன் பிறகு அடுத்த நாள் காலை சம்பத்குமாரும் வீரய்யன்னும் பூஜை போட்ட பிள்ளையார் கோவில் கட்டும் இடத்திற்கு சென்றார்கள். அப்போது வீரய்யன் பாத்ரூம செல்வதற்காக ஜல்லி குவியல் அருகே சென்ற போது அங்கு ஒருநபர் இரத்தகாயத்துடன் குப்புற விழுந்து கிடப்பதாக சம்பத் குமாரிடம் சொன்னதாகவும், சம்பத்குமார் இத்தகவலை கோவிந்தராஜீக்கு தெரியபடுத்தியதாகவும், எங்களிடம கூறினார். அந்த நபர் இறந்துவிட்டதாக கேள்விபட்டோம் போலிசார் எங்களை விசாரணை செய்து எங்களை அனுப்பி விட்டார்கள்.

**குறுக்கு விசாரணை** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.02.17 10:13:44 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 225/2025 |
| வழக்கு சாட்சி | : | PW 6 |
| நாள் | : | 17.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | தங்கவேல் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜர**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் திருவாரூர் மாவட்டம் செரவலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். சுமார் 25 வருடங்களாக கட்டுமான வேலையை செய்து வருகிறேன். கோவில் கட்டும் பணி கான்டிராக்ட் எடுத்த சம்பத்குமார் என்பவருடன் வேலை செய்து வருகிறேன். அதே போல் கடந்த 2024ம் வருடம் சம்பத் என்பவர் போன் செய்து என்னையும் தியாகராஜனையும், திருவள்ளூரை அடுத்த கீழச்சேரி கிராமத்தில் கொத்தனார் வேலை செய்வதற்காக அழைத்தார் அதன்படி நானும் தியாகராஜனும் அன்றைய தேதி இரவு 08 மணிக்கு சம்பத்குமார் கூறிய இடத்திற்கு சென்றோம். நாங்கள் இருவரும் மப்பேடு கூட்ரோடுக்கு வந்து டிபன் வாங்கிகொண்டு தங்கும் இடத்திற்கு சென்றோம். அதன் பிறகு அடுத்த நாள் காலை சம்பத்குமாரும் வீரய்யன்னும் பூஜை போட்ட பிள்ளையார் கோவில் கட்டும் இடத்திற்கு சென்றார்கள். அப்போது வீரய்யன் பாத்ரூம் செல்வதற்காக ஜல்லி குவியல் அருகே சென்ற போது அங்கு ஒருநபர் இரத்தகாயத்துடன் குப்புற விழுந்து கிடப்பதாக சம்பத் குமாரிடம் சொன்னதாகவும், சம்பத்குமார் இத்தகவலை கோவிந்தராஜீக்கு தெரியபடுத்தியதாகவும், எங்களிடம் கூறினார். அந்த நபர் இறந்துவிட்டதாக கேள்விபட்டோம் போலிசார் எங்களை விசாரணை செய்து எங்களை அனுப்பி விட்டார்கள்.

**குறுக்கு விசாரணை** இலலை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM Digitally signed by S TASNEEM Date: 2026.02.17 10:13:50 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.